முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

**61 T I**

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023 (2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)<br>Third Term Examination 2023 (2024) | භූගෝල විද්‍යාව I, II<br>புவியியல் I, II<br>Geography I, II | 10 වන ශ්‍රේණිය<br>தரம் 10<br>Grade 10 |

| | |
|---|---|
| පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours | අමතර කියවීම් කාලය — මිනිත්තු 10 යි<br>மேலதிக வாசிப்பு நேரம் — 10 நிமிடம்<br>Additional Reading time — 10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## புவியியல் I

அறிவுறுத்தல்கள்
- இவ் வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.
- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.

- **1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) புவியில் தொடர்ச்சியான இடைத்தொடர்புகளைக் கொண்டிருக்கும் தாவர மற்றும் விலங்கு இனங்களின் முழு வாழ்க்கைச் சூழலும் ................................ எனப்படும்.
(வளிக் கோளம், கற்கோளம், உயிர்க் கோளம்)

2) உருவாக்கத்தின் அடிப்படையில் இமயமலை மற்றும் அல்ப்ஸ் மலைகள் ....................... எனப்படும்.
(மடிப்பு மலைகள், சிறு மலைகள், குன்றுகள்)

3) உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரி ................................ எனப்படுகின்றது.
(சுப்பீரியர், பைகால், தித்திக்கா)

4) சிறு ஏற்றுமதிப்பயிரான முத்திரி உற்பத்தி அதிகளவு ......................... மாவட்டத்தில் அதிகளவு பரந்து காணப்படுகின்றது. (மன்னார், மாத்தளை, களுத்துறை)

5) 2001ம் ஆண்டில் மைக்ரோ கார் பொருத்தும் கைத்தொழில் நிலையம் .......................... இல் நிறுவப்பட்டது. (வீரவில, பொல்கஹவெல, பட்டஎத்த)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் சரி ‘ச’ ஐயும் பிழையாயின் பிழை ‘பி’ ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

6) கடல் நீர்மட்டத்திற்கு மேல் உயர்ந்து காணப்படும் நிலப்பகுதி கண்டங்கள் ஆகும் (ச / பி)

7) மென்பாறைக்கோளம் கற்கோளத்தின் கீழ் காணப்படுகின்றது. (ச / பி)

8) உலகின் இரும்புத்தாது உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி நாடாக சீனா காணப்படுகின்றது. (ச / பி)

9) இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தி மேற்கொள்ளும் மாவட்டம் பொலன்னறுவையாகும். (ச / பி)

10) உள்நாட்டின் ஆறுகள் மற்றும் குளங்களை அண்மித்து மேற்கொள்ளும் மீன்பிடி உவர் நீர் மீன்பிடியாகும். (ச / பி)

- **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11) **அ**

மடிப்பு மலைகள்

1. அட்லஸ்
2. அல்ப்ஸ்
3. அல்டாய்

**ஆ**

கண்டங்கள்

A - அவுஸ்திரேலியா
B - ஆசியா
C - ஐரோப்பா
D - ஆபிரிக்கா

1. CBA 2. CDB 3. DCB 4. ACD (…....…)

12) **அ**

ஆற்றின் ஆரம்பம்

1. பனிஉருகளின் மூலம்
2. ஏரியில் இருந்து
3. ஊற்றுக்களில் இருந்து

**ஆ**

ஆறுகள்

A - நைல் நதி
B - றைன் நதி
C - தேம்ஸ் நதி
D – மகாவலி

1. BAC 2. BCA 3. CAB 4. DCA (…....…)

13) **அ**

கண்டமேடைகள்

1. ஆபிரிக்கக் கண்ட மேடை
2. ஆசியக் கண்ட மேடை
3. அவுஸ்திரேலியக் கண்ட மேடை

**ஆ**

அமைந்துள்ள தீவுகள்

A - பபுவா நியுகினியா
B - சைப்ரஸ்
C - சுமாத்ரா
D - மடகஸ்கார்

1. ACD 2. DAC 3. BDC 4. DCA (…....…)

14) **அ**

கனிய வளம்

1. காரீயம்
2. சீனக்களி
3. பிரம்பு பொருட்கள்

**ஆ**

காணப்படும் பிரதேசம்

A - மீடியாகொட
B - ரடவடுன்ன
C - புல்மோட்டை
D – போகல

1. ACD 2. DCB 3. DAB 4. ADB (…....…)

15) **அ**

பயிர்கள்

1. நெல்
2. தென்னை
3. சிறு ஏற்றுமதிப் பொருட்கள்

**ஆ**

ஆராய்ச்சி நிலையங்கள்

A - லுனுவில
B - அகுனகொலபெலஸ்ஸ
C - போம்புவெல
D - மாத்தளை

1. ACB 2. BAD 3. CAB 4. CAD (…....…)

- **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

16) கண்ட எல்லையில் இருந்து சமுத்திரத்தை நோக்கி பரந்துள்ள ஆழம் குறைந்த நீர்ப்பரப்பு ……………….. எனப்படுகின்றது.


17) துந்திராக் காலநிலை …………………………….. பிரதேசத்தில் அமைந்துள்ளது.

18) பல்வேறு மலையுச்சிகள் உயர் எழுச்சிகளுடன் கூடியதாக பரந்துள்ள நிலத்தோற்றம் …………………….. எனப்படுகின்றது.

19) இலங்கையின் பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் களனிக்கு அன்மையில் …………………. எனும் இடத்தில் அமைந்துள்ளது.

20) 1:50000 இடவிளக்கவியல் படத்தில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இடத்தை காட்டும் குறியீடு …………………… நிறத்தில் காட்டப்படுகின்றது.

- **21 தொடக்கம் 19 வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தை பயன்படுத்தி வெற்றிடத்தை நிரப்புக.**




21) வரைபடத்தின் படி 2016 ஆம் ஆண்டில் அதிக கல்வியறிவு வீதம் …………………… நாட்டில் காணப்படுகின்றது.

22) 2016 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த கல்வியறிவு வீதம் ……………………….. நாட்டில் காணப்படுகின்றது.

23) 2017 ஆம் ஆண்டில் அதிக ஆயுள் எதிர்பாக்கை கொண்ட நாடு ……………………… ஆகும்.

24) 2017 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த ஆயுள் எதிர்பார்க்கை கொண்ட நாடு ……………………….. ஆகும்.

25) வரைபின் படி கல்வியறிவு மற்றும் ஆயுள் எதிர்பார்க்கை என்பன சம அளவில் காணப்படும் நாடு ……………………… ஆகும்.

- **26 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

26) புவியின் கற்கோளத்தகடுகளில் சமுத்திரபகுதியை உள்ளடக்கிய தகடு யாது?
1. ஆபிரிக்கத்தகடு 2. பசுபிக்தகடு
3. யுரேசியன் தகடு 4. அந்தாடிக்கா தகடு (……..)

27) கீழே குறிப்பிட்ட பண்புகள் எந்தப் பயிர்ச்செய்கையுடன் தொடர்புபட்டது.
- 2000 மி.மீ சராசரி மழைவீழ்ச்சி
- 27 பாகை செல்சியஸ் சராசரி வெப்பநிலை
- வண்டல் மண்

1. நெல் 2. கோதுமை 3. இறப்பர் 4. தெங்கு (……..)

28) மேல் நோக்கிச் செல்லும் போது வெப்பநிலை குறைவடைதல், நீராவி தூசுக்கலற்ற நிலை போன்ற பண்புகள் வளிமண்டத்தின் எப்படையின் பண்புகளாகும்
1. மாறன் 2. படை 3. இடை 4. வெப்பம் (……..)

29) மஞ்சூரியர் மற்றும் நுல்லாபார் சமவெளிகள் என்பன அமைந்துள்ள கண்டங்கள் முறையே சரியாகத்தருவது?
1. ஆசியா மற்றும் அவுஸ்திரேலியா 2. அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பா
3. ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பா 4. ஆசியா மற்றும் ஆபிரிக்கா (……..…)

30) அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைநதுள்ள தீவு ஒன்றிற்கான உதாரணம்
1. ஹவாய் 2. ஐஸ்லாந்து 3. ஜப்பான் 4. தஸ்மேனியா (……..…)

31) பின்வரும் விடைகளுள் செங்கடல் தொடர்பான சரியான விடை யாது?
1. முற்றிலும் நிலத்தினால் சூழப்பட்ட கடலாகும்
2. சமுத்திரத்துடன் இணைவைக் கொண்டுள்ளது
3. மத்தியதரைக் கடலின் ஒரு பகுதியாகும்
4. பகுதியளவு நிலத்தால் சூழப்பட்ட கடலாகும் (……..…)

32) இலங்கையில் அதிகளவு அரிசியை உற்பத்தி செய்யும் இரண்டு உலர்வலய மாவட்டங்கள்.
1. அம்பாறை மற்றும் மொனராகலை 2. மாத்தளை மற்றும் அநுராதபுரம்
3. பொலன்னறுவை மற்றும் அம்பாறை 4. குருநாகல் மற்றும் பொலன்னறுவ (……..…)

33) இலங்கையில் தயாரிக்கப்பட்ட படகுகள் ஏற்றுமதி செய்யப்படும் இரண்டு நாடுகள்
1. மாலைதீவு மற்றும் சுமாத்திரா 2. இந்தியா மற்றும் பாகிஸ்தான்
3. தென்கொரியா மற்றும் மலேசியா 4. இந்தியா மற்றும் சிங்கபூர் (……..…)

34) பல்தேசியக் கம்பனிகள் அதிகளவு உற்பத்தி செய்யப்படுவதும் உற்பத்திக்காக செலவிடப்படும் முதலீட்டை விட இரண்டு மடங்கு ஆய்விற்காக செலவிடப்படும் உற்பத்திக் கைத்தொழில் யாது?
1. மோட்டார் வாகனக்கெத்தொழில் 2. இரும்பு மற்றும் உருக்குக் கைத்தொழில்
3. இலத்திரனியல் கைத்தொழில் 4. பெற்றோல் இரசாயனக் கைத்தொழில் (……..…)

35) பின்வரும் விடைகளில் கருப்பொருட்படம் அல்லாத விடையைத் தெரிவு செய்க
1. இலங்கையின் வீதிப்படம் 2. ஆபிரிக்காவின் தரைத்தோற்றப்படம்
3. இடவிளக்கவியல் படம் 4. உலகின் சனத்தொகைப்படம் (……..…)

36) இலங்கையின் 1: 50000 ம் இடவிளக்கப்படத்தில் 4 $KM^2$ பரப்பு கொண்ட நெல்வயல் எவ்வளாவாகக் காட்டப்படும்.
1. 12 சதுர செ.மீ 2. 8 சதுர செ.மீ
3. 16 சதுர செ.மீ 4. 4 சதுர செ.மீ (……..…)

- A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தலைப்புகளின் சோடிகளை நன்கு அவதானித்து 37 - 40 வரையுள்ள வினாக்குளுக்கு விடை தருக

A - 1. சூழல் மாசடைவு
2. கைத்தொழில் மயமாக்கம்
B - 1. எழுத்தறிவு
2. அபிவிருத்தி
C - 1. பயிர்ச்செய்கை
2. மக்கள் தொகை
D - 1. காலநிலை மாற்றம்
2. புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம்

37) பின்வரும் எச்சோடித் தலைப்புகளில் முதல் காரணி இரண்டாம் காரணிகளில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது.
1. A 2. B 3. C 4. D (……..…)

38) பின்வரும் எச்சோடித் தலைப்புகளில் இரண்டாம் காரணியின் அதிகரிப்பு முதலாம் காரணிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
1. A 2. B 3. C 4. D (……..…)

39) பின்வரும் எச்சோடித் தலைப்புகளில் முதல் காரணியின் அதிகரிப்பு இரண்டாம் காரணிகளில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது.
1. A 2. B 3. C 4. D (……..…)

40) பின்வரும் எச்சோடித் தலைப்புகளில் முதல் காரணியின் குறைவு இரண்டாம் காரணிகளில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.
1. A 2. B 3. C 4. D (……..…)

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

61 T II

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

## புவியியல் II

- இவ்வினாத்தால் I, II எனும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி I உள்ள வினாக்கள் கட்டாயமானது அதில் (a),(b),(c) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுத வேண்டும்
- பகுதி II இருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்
- எல்லாமாக **ஐந்து** வினாவக்கு விடை எமக வேண்டும்

## பகுதி I

1. a) 1: 50000 இடவிளக்கவியல் படத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

- 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்கள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

1) படப்பிரதேசத்தில் இலக்கம் 1 இனால் குறித்துக்காட்டப்படும் கரையோர அம்சம் யாது?
(முனை, குடா, மணற்றடை)
2) படப்பிரதேசத்தில் இலக்கம் 2 இனால் காட்டப்படும் வடிகாலமைப்பு அம்சம் யாது?
(பொங்குமுகம், பின்னிய ஆறு, மியாந்தர்)
3) படப்பிரதேசத்தில் இலக்கம் 3 இனால் காட்டப்படும் பண்பாட்டு அம்சம் யாது?
(உபதபாலகம், பள்ளிவாசல், விஷேட கட்டிடம்)
4) படப்பிரதேசத்தில் இலக்கம் 4 இனால் காட்டப்படும் பயிர்ச்செய்கை யாது?
(நெல், வீட்டுத்தோட்டம், பிறபயிர்கள்)

- படப்பிரதேசம் பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு கூற்றையும் வாசித்து அவை சரியாயின் (ச) எனவும் பிழையாயின் (பி) எனவும் விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.

a. சட்டகம் 1 இல் அகலாங்கு, நெட்டாங்கு இடைவெட்டும் புள்ளியைக் காட்டுகின்றது.
b. பொல்வத்தை ஆற்றின் குறுக்கே ஒரு நிர்வாக எல்லை நீண்டு செல்கின்றது.
c. வரைபடத்தில் தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற சகல நிலப்பயன்பாடுகளும் காணப்படுகின்றன.

5) சட்டகம் B இல் காட்டப்படும் குடியிருப்பு வகையைக் குறிப்பிடுக.
6) சட்டகம் C இல் குறியீடுகளினால் காட்டப்படும் இரண்டு பெதுச்சேவை நிறுவனங்களை குறிப்பிடுக.

b) 1 -5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் இருந்து ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையைக் குறித்துக் காட்டும் சரியான ஆங்கில எழுத்தினை தெரிவு செய்து எழுதுக.


1) கெனரித் தீவு - L, M, N
2) மலேசிய தீபகற்பம் - A, B, C
3) ஒக்கோட்ஸ் கடல் - P, Q, R
4) மெக்கன்ஸி ஆறு - H, J, K
5) பின்லாந்து - S, T, V

c) 1 -5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப்படத்தில் இருந்து ஒவ்வொரு வினாவுக்குரிய சரியான விடையைக் குறித்துக்காட்டும் சரியான எழுத்தினைத் தெரிவு செய்து எழுதுக.

1) பாசிக்குடா கடல் - WXY
2) கொலன்கஹ சுரங்கம் - PQR
3) மஹா இலுப்பள்ளம் - HIJ
4) நீர்கொழும்பு - STU
5) கன்னொருவ - EFG

## பகுதி II

02) புவியின் உள்ளமைப்பைக் காட்டும் வரைபடம் தரப்பட்டுள்ளது.





i. வரைபடத்தில் A மற்றம் B னால் காட்டப்படும் பகுதிகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii. a) மற்றும் B படைகளை பிரிக்கும் எல்லையைப் பெயரிடுக.
b) B படையின் இரண்டு பகுதிகளைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

iii. a) படத்தின் C படையின் உப படைகள் இரண்டினை பெயரிடுக.
b) A படையினை மோசமாகப் பாதிக்கும் இரண்டு மானிட நடவடிக்கைகளை சுருக்கமாக விவரிக்குக. (3 புள்ளிகள்)

03) i) நீரியல் வட்டம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)





ii) தரப்பட்டுள்ள வரைபடத்தில் நீரியல் வட்டத்தின் பகுதிகள் தரப்பட்டுள்ளன. அதில் A, B, மற்றும் C எழுத்துக்களினால் காட்டப்படும் பகுதிகளைப் பெயரடுக. (3 புள்ளிகள்)

iii) a) மனித செயற்பாடுகள் நீரியல் வட்டச் செயற்பாடுகளைப் பாதிக்கின்றன. அதற்கு காரணமான இரண்டு மானிடக் காரணிகளைக் குறிப்பிடுக.

b) நீரினை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளக் கூடிய ஏதேனும் இரண்டு வழிமுறைகளை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விவரிக்குக. (5 புள்ளிகள்)

- **வினா இலக்கம் 04 மற்றும் 05 ற்கு பின்வரும் உலக புறவுருவப்படத்தைப் பயன்படுத்துக.**



04) i) படத்தில் A மற்றும் எழுத்துக்களினால் காட்டப்படும் உற்பத்திக் கைத்தொழில் நாடுகள் இரண்டினை பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) உலகில் உற்பத்திக் கைத்தொழில் எதிர் நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) உலகின் கப்பல் கட்டும் கைத்தொழிலின் விருத்தியடைந்த நாடுகள் மட்டுமே ஆரம்பத்தில் மேற்கொண்டது. அந்நாடுகள் இரண்டினை குறிப்பிடுக.

b) தற்பொழுது கிழக்காசிய நாடுகள் கப்பல் கட்டும் கைத்தொழிலில் முன்னணி வகிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் சாகமான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விவரிக்குக. (5 புள்ளிகள்)

05) உலக விவசாய நிலப்பயன்பட்டினை அடிப்படையில்

i) a) உலகின் பிரதான வர்த்தக பயில் செய்கை


b) ஆசிய நாடுகளில் பிழைப்பூதிய பயிராக மேற்கொள்ளப்படும் முக்கிய பயிர்ச்செய்கையைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) மேலே வினா 1 (a) இல் குறிப்பிட்ட பயிர்ச்செய்கையின் மூன்று சிறப்புப் பண்புகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) மேலே வரைபடத்தில் வர்த்தக ரீதியான பாற்பன்னைத் தொழிலில் ஈடுபடும் நியூசிலாந்து மற்றும் டென்மார்க் குறித்து நிற்கும் எழுத்தினைப் பெயரிடுக.

b) மேலே குறிப்பிட்ட நாடுகளில் பாற்பன்னைத் தொழிலின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

- வினா இலக்கம் 06 மற்றும் 07 ற்கு பின்வரும் இலங்கை புறவுருவப்படத்தைப் பயன்படுத்துக.



04) i) படத்தில் A மற்றும் எழுத்துக்களினால் காட்டப்படும் உற்பத்திக் கைத்தொழில் நாடுகள் இரண்டினை பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) உலகில் உற்பத்திக் கைத்தொழில் எதிர் நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) உலகின் கப்பல் கட்டும் கைத்தொழிலின் விருத்தியடைந்த நாடுகள் மட்டுமே ஆரம்பத்தில் மேற்கொண்டது. அந்நாடுகள் இரண்டினை குறிப்பிடுக.

b) தற்பொழுது கிழக்காசிய நாடுகள் கப்பல் கட்டும் கைத்தொழிலில் முன்னணி வகிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் சாகமான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விவரிக்குக. (5 புள்ளிகள்)

05) உலக விவசாய நிலப்பயன்பட்டினை அடிப்படையில்

i) a) உலகின் பிரதான வர்த்தக பயில் செய்கை


b) ஆசிய நாடுகளில் பிழைப்பூதிய பயிராக மேற்கொள்ளப்படும் முக்கிய பயிர்ச்செய்கையைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) மேலே வினா 1 (a) இல் குறிப்பிட்ட பயிர்ச்செய்கையின் மூன்று சிறப்புப் பண்புகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) மேலே வரைபடத்தில் வர்த்தக ரீதியான பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபடும் நியூசிலாந்து மற்றும் டென்மார்க் குறித்து நிற்கும் எழுத்தினைப் பெயரிடுக.

b) மேலே குறிப்பிட்ட நாடுகளில் பாற்பண்ணைத் தொழிலின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

- வினா இலக்கம் 06 மற்றும் 07 ற்கு பின்வரும் இலங்கை புறவுருவப்படத்தைப் பயன்படுத்துக.




(9) WWW.PastPapers.WiKi (8)



Download Term Test Papers, Short Notes From One Place!

06) i) இலங்கையின் மாவட்டப்படத்தில் தேயிலை பயிரிடும் இரண்டு மாவட்டங்கள் A மற்றும் B எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ளது. அவற்றை முறையே பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) a) C எனும் எழுத்தினால் காட்டப்படும் இலங்கையின் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தினை பெயரிடுக.

b) தேயிலைப் பயிர்ச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு பௌதிகக் காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) தேயிலை உற்பத்தியுடன் தொடர்பான இரண்டு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

b) தேயிலைப் பயிர்ச்செய்கையினால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படும் இரண்டு நன்மைகளை விவரிக்குக. (5 புள்ளிகள்)

07) i) இலங்கையின் இரண்டு சுற்றுலா வலயங்கள் F மற்றும் E னால் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையே பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் அண்மைக்கால போக்குகள் மூன்றினை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) சுற்றுலாத் தொழிலை மேம்படுத்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் இரண்டு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

b) சுற்றுலாக் கைத்தொழிலினால் ஏற்பட்டுள்ள இரண்டு சமூக மற்றும் கலாச்சார பிரச்சினைகள் இரண்டினை சுருக்கமாக விவரிக்குக. (5 புள்ளிகள்)

08) இலங்கையின் சில கைத்தொழில்கள் கீழே தரப்பட்டள்ளன.
(காரீயம், டயர், இரத்தினக்கல், அரிசிமா)

i) மேலே தரப்பட்டுள்ள கைத்தொழில்களில்

a) கனிய அடிப்படையிலான கைத்தொழில்

b) விவசாயம் சார்ந்த கைத்தொழில் என்பவற்றைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையின் மின்சார துறையின் மூன்று புதிய போக்குகளை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) இலங்கையின் பின்வரும் அமைவிடங்களில் பிரசித்தி பெற்ற பாரம்பரிய குடிசைக் கைத்தொழில்களை பெயரிடுக

- அம்பலாங்கொட -
- பிலிமத்தலாவ -

b) இலங்கையின் குடிசைக் கைத்தொழில் எதிர்நோக்கும் இரண்டு பிரச்சினைகளை சுருக்கமாக விவரிக்குக. (5 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
(9) WWW.PastPapers.WiKi (9)



Download Term Test Papers, Short Notes From One Place!

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්



පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**